# மட்/பட்/வெல்லாவெளி கலைமகள் மகா வித்தியாலயம்

## கொவிட் 19 விடுமுறை காலச் செயலட்டை – 2020

### தரம் 10 மாணவர்களுக்கான
### வினாத் தொகுப்பு (புதிய பாடத்திட்டம்)
### சைவநெறி - தவணை 01 , 02




ஆக்கம்

திருமதி.கஜேந்தி தீபராசா

ஆசிரியர்

மட் / பட் / வெல்லாவெளி கலைமகள் மகா வித்தியாலயம்

## செயலட்டை-01

**சைவநெறி – தரம் 10** **அலகு -01**

- கடவுள் என்பதன் பொருள் யாது?
- இறைவனின் முத்திருமேனிகளும் எவை?
- "குணம் ஒன்றும் இல்லான்..:"என இறைவனைப் பாடியவர் யார்?
- இறைவனின் மறுபெயர்கள் 4 தருக?
- சைவசித்தாந்தம் கூறும் இறைவனின் இரு நிலைகளும் எவை?
- சொரூப நிலை என்பது யாது?
- தடத்த நிலை என்பது யாது?
- இறைவனின் ஐந்தொழில்களும் எவை?
- இறைவனின் ஐந்தொழில்களையும் வேறு எவ்வாறு அழைப்பர்?
- படைத்தல் என்பது யாது?
- மறைத்தல் தொழில் என்பது யாது?
- அருளல் என்பது யாது?
- இறைவனின் ஐந்தொழில்களையும் அவை ஆற்றும் மூர்த்தங்களையும் குறிப்பிடுக?
- இறைவனின் எண்குணங்களில் நான்கைக் குறிப்பிடுக?
- இறைவன் குணாதீதர் எனக் அழைக்கப்படுவதன் அர்த்தம் யாது?
- இறைவன் நிர்விகாரி எனக் குறிப்பிடுவதன் காரணம் யாது?
- இறைவனின் திருவருட்சக்திகளாகக் கொள்ளப்படும் மூர்த்தங்கள் 4 தருக?
- கடவுளை நாம் எப்படி நினைத்துப் பார்த்தாலும் உணரமுடியாது என்பதை விளக்கும் மாணிக்கவாசகர் பாடலடி எது?
- தவம் செய்தலுக்கு நிகரானது எது?
- கடவுள் ஒருவரே என்பதை வேதம் எவ்வாறு எடுத்துரைக்கின்றது?

## செயலட்டை-02

**சைவநெறி – தரம் 10** **அலகு -02**

- "அரிது அரிது மானிடராதல் அரிது" எனக் கூறியவர் யார்?
- ஆசாரத்தின் இரு வகைகளும் எவை?
- உள்ளத்தோடு தொடர்புபட்ட ஆசாரம் எது?
- உடலோடு தொடர்புபட்ட ஆசாரம் எது?
- புறஆசாரங்கள் 4 தருக?
- ஆகஆசாரங்கள் என்பவை எவை?
- நாம் தூய்மையாக வைத்திருக்க வேண்டிய 4 தருக?
- வீட்டிலும் ஆலயங்களிலும் செய்யும் வழிபாடுகளில் கடைப்பிடிக்கும் ஆசார நியதிகள் 2 தருக?
- "இந்தச் சரீரம் நமக்கு கிடைத்தது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" எனக் கூறியவர் யார்?
- சைவ நாற்பாதங்களும் எவை?
- இறை வழிபாட்டுக்கு இன்றியமையாதன எவை?
- அஷ்டபுஷ்பங்கள் எனப்படுபவை எவை?
- அஷ்டபுஷ்பங்கள் என ஏன் அவை அழைக்கப்படுகின்றன?
- சுவாமி விபுலானந்தர் இறைவன் உவக்கும் இன்மலர்களாக கூறியவை எவை?
- அட்டாங்க யோகம் என்பது யாது?
- வாழ்க்கைப்படிநிலைகள் நான்கும் எவை?
- ஒப்புரவு என்பது யாது?
- சமயத்தோடு ஒன்றிணைந்த கலைகள் 4 தருக?
- கல்வியின் பயன்கள் 4 தருக?
- கல்வி பற்றிய திருவள்ளுவர் கருத்து யாது?



**MRS.K.THEEPAN, BT/PD/VELLAVELY KALAIMAHAL MAHA VID**

## செயலட்டை-03

**சைவநெறி – தரம் 10** **அலகு -03**

- விழுமியம் என்பது யாது?
- சைவசமயம் வலியுறுத்தும் விழுமியங்கள் 4 தருக?
- "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்" எனக் குறிப்பிட்டவர் யார்?
- அன்பு எனக் கொள்ளப்படுவது எது?
- சைவசமயத்தின் நோக்கம்(இலட்சியம்) என்ன?
- கொலை,களவு,புலாலுண்ணல் என்பவற்றை சைவசமயம் எவ்வாறு கூறுகிறது?
- பாரதி கூறும் தவம் எது?
- திருமூலர் கருத்துப்படி தெய்வநிலை எய்துபவர் யார்?
- உண்மை பேசுதல் என்பதை விளக்கும் ஓரே சொல் எது?
- வாய்மை என அழைக்கப்படக் காரணம் என்ன?
- திருவள்ளுவர் வாய்மை என்றால் என்ன எனக் கூறுகிறார்?
- தவம், தானம் செய்பவர்களை விட உயர்வானவர்கள் என திருவள்ளுவர் யாரைக் கூறுகிறார்?
- சத்தியம் ஒன்றே வெல்லும் எனும் பொருள்படத்தக்கதாக வேதம் கூறும் வாசகம் எது?
- வாய்மையின் சிறப்பை உபநிடத மகாவாக்கியம் எவ்விதம் குறிப்பிடுகிறது?
- "வாய்மை வெல்லும்" என்ற இலட்சிய வாழ்வுக்கு முன்னுதாரணமாக திகழ்ந்தவர்கள் யாவர்?
- நவீனயுகத்து அரிச்சந்திரன் எனப் போற்றப்படுபவர் யார்?
- திருவள்ளுவர் கருத்துப்படி இவ்வுடல் எமக்கு கிடைத்தது எதற்காக?
- "செய்க தவம் ! செய்க தவம்! நெஞ்சே…" எனக் கூறியவர் யார்?
- இறைவன் ஜீவகாருண்யத்தை வெளிப்படுத்திய 2 சந்தர்ப்பங்களை தருக?
- அரிச்சந்திரன் கதை மூலம் வெளிப்படுத்தப்படும் 2 விடயங்களைக் கூறுக?

# <u>செயலட்டை-04</u>

சைவநெறி – தரம் 10 அலகு -04

- காலக்கணிப்பு அலகுகள் 4 தருக?
- காலக்கணிப்புக்கு அடிப்படையாக அமைவன எவை?
- கால அலகுகளுள் பெரியது எது?
- சந்திரமானம் என்றால் என்ன?
- சௌரமானம் / சூரியமானம் என்றால் என்ன?
- சந்திரமானக் கணிப்பீடு எத்தனை வகைப்படும் ? அவை எவை?
- பூர்ணிமாந்த முறை என்றால் என்ன?
- அமாந்தமுறை என்பது யாது?
- மாதம் எனப் பெயர் வரக் காரணம் யாது?
- மாதம் என்பதை குறிக்கும் தமிழ் பெயர்கள் 2 தருக?
- சூரியன் எந்த இராசியில் பிரவேசிக்கும் போது தமிழ் ஆண்டு பிறக்கிறது?
- ஆரம்ப காலத்தில் சந்திரமான நெறிப்படி காலக் கணிப்பீட்டை மேற்கொண்டோர் மூவர்?
- கிழமை, வாரம் எனும் சொற்களின் பொருள்?
- கிழமைப் பெயர்கள் எந்த அடிப்படையில் இடப்பட்டுள்ளன?
- ஏழு நாட்களின் தொகுதி எவ்வாறு அழைக்கப்படும்?
- இந்துக்களைப் பொறுத்தவரை ஒரு நாளின் எல்லை யாது?
- கிறிஸ்தவ முறையில் ஒரு நாள் என்பது யாது?
- இஸ்லாமியருக்கு ஒரு நாள் என்பது எதனைக் குறிக்கிறது?
- இந்து மரபில் காலக்கணிப்பின் முக்கியத்துவம் யாது?
- சைவ மக்களால் பஞ்சாங்கம் பார்த்து மேற்கொள்ளப்படும் நற்கருமங்கள் 4 தருக?

# செயலட்டை-05

சைவநெறி – தரம் 10 அலகு -05

- "இந்தச் சரீரம் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" எனக் கூறியவர் யார்?
- ஆன்ம ஈடேற்றம் கருதி செய்யப்படும் ஒருவகைச் சாதனை எது?
- விரதம் என்பதன் வரைவிலக்கணம் யாது?
- விரதம் அனுட்டிப்பதனால் ஏற்படும் நன்மைகள் 4 தருக?
- சனிக்கிழமைக்கு உரித்துடைய கிரகம் எது?
- சனிக்குரிய வழிபாட்டு நாட்களில் சிறப்பிடம் பெறும் நாள் எது?
- சனீஸ்வரனை எவ்வாறு வழிபடுவர்?
- சனீஸ்வரனை வழிபட்டு தானம் செய்யும் பொருட்கள் 2 தருக?
- புரட்டாதிச் சனியன்று எவ்வாறு வழிபடுதல் மேலான பலனைத் தரும்?
- சனிவிரதம் எதனோடு நிறைவு பெறும்?
- கந்தசஷ்டி விரதம் எப்போது அனுட்டிக்கப்படும்?
- கந்தசஷ்டி விரதம் யாரை நோக்கி அனுட்டிக்கப்படும்?
- கந்தசஷ்டி விரதத்தின் ஆறாம் நாள் முருகன் ஆலயங்களில் நாடகப்பாணியில் இடம்பெறும் சமயநிகழ்வு எது?
- கந்தசஷ்டி விரத காலங்களில் பாராயணம் செய்யப்படும் நூல் எது?
- கந்தசஷ்டி விரதம் மூலம் மனிதர்களிடமிருந்து நீங்கும் அசுரப்பண்புகள் 4 தருக?
- விநாயகர் சஷ்டிவிரதம் எப்போது அனுட்டிக்கப்படும்?
- விநாயகர் சஷ்டிவிரதம் வேறு எவ்வாறு அழைக்கப்படும்?
- பெருங்கதை விரத காலங்களில் பாராயணம் செய்யப்படும் நூல்கள் எவை?
- விநாயகர் சஷ்டிவிரத காலங்களில் விநாயகருக்கு நிவேதிக்கும் பொருட்கள் 4 தருக?
- விநாயகர் சஷ்டிவிரதம் எவ்வாறு அனுட்டிக்கப்படும்?

# <u>செயலட்டை-06</u>

சைவநெறி – தரம் 10 அலகு -06

- பண்டிகைகள் 4 தருக?

…………………………………………………………………………………………………………

- விசேட நாட்களில் நாம் கைக்கொள்ளும் வழக்கங்கள் 4 தருக?

……………………………………………………………………………………………………….

- இளவேனில் கால ஆரம்பத்தில் இடம்பெறும் பண்டிகை எது?

………………………………………………………………………………………………………

- தீபாவளி என்பதன் பொருள் யாது?

……………………………………………………………………………………………………….

- தீபாவளி எப்போது கொண்டாடப்படுகிறது?

……………………………………………………………………………………………………….

- தீபாவளியுடன் தொடர்புடைய அசுரன் யார்?

…………………………………………………………………………………………………………

- தீபாவளிப் பண்டிகை எதற்காகக் கொண்டாடப்படுகிறது?

…………………………………………………………………………………………………………

- அசுரர் , தேவர் என உருவகிக்கப்படுபவை எவை?

………………………………………………………………………………………………………….

- தீபாவளியின் தத்துவம் யாது?

……………………………………………………………………………………………………………

- தீபாவளி எவ்வாறு கொண்டாடப்படுகிறது?

……………………………………………………………………………………………………………

## செயலட்டை-07

சைவநெறி – தரம் 10 அலகு -07

- பூர்வக் கிரியை என்பது யாது ?
- அபரக் கிரியை என்பது யாது ?
- பூர்வக் கிரியைகள் 5 தருக ?
- அபரக் கிரியைகள் 5 தருக ?
- பிரமச்சரிய நிலையிலிருந்த ஒருவரை இல்லறத்திற்கு புக அங்கீகரிப்பதாக அமையும் சடங்கு எது?
- திருமணக் கிரியையில் இடம்பெறும் அம்சங்கள் 5 தருக?
- காப்புக் கட்டுதல் சடங்கு எதற்காக மேற்கொள்ளப்படும்?
- மணமக்கள் வீடுகளில் முள்முருக்கை மரம் நடப்படும் திசை எது?
- கன்னிகாதானம் என்றால் என்ன?
- தாலி கட்டிய பின்னர் மணமகன்,மணமகள் போன்றோர் யாராக நினைந்து கிரியைகள் மேற்கொள்ளப்படும்?
- தாலிகட்டிய பின் மணமகளை மணமகனின் இடப்பக்கத்தில் அமரச்செய்வதற்கான தத்துவம்யாது?
- வசிட்டமா முனிவரின் மனைவியின் பெயர் என்ன?
- அருந்ததி பார்த்தல் ஏன் இடம்பெறுகிறது?
- மணமகன் மணமகளின் கையை பிடித்தபடியாக அக்கினியைச் சுற்றி மூன்று முறை வலம் வருவது எதனை உணர்த்துகிறது?
- மாலை மாற்றும் சடங்கானது எதனை வலியுறுத்துகிறது?
- அம்மி மிதித்தல் சடங்கு எவ்வாறு இடம்பெறும்?
- அம்மி மிதித்தல் சடங்கு ஏன் மேற்கொள்ளப்படுகிறது?
- பால் பழம் புசித்தல் சடங்கு எதற்காக மேற்கொள்ளப்படுகிறது?

- அட்சதை என்பது யாது?
- ஆசிர்வாதம் பெறல் எவ்வாறு இடம்பெறும்?

## செயலட்டை-08

**சைவநெறி – தரம்** 10 **அலகு -08**

- சண்மதங்களும் எவை?
- இந்து சமயத்தின் முதல் நூல்கள் எவை?
- பொது நூல் எது? சிறப்பு நூல் எது?
- "வேதமொடு ஆகமம் மெய்யாம்..." எனக் கூறும் நூல் எது?
- வேதம் என்பதன் பொருள் யாது?
- வேதத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் 4 தருக?
- சுருதி என்பதன் பொருள் யாது?
- எழுதாமறை என ஏன் வேதங்கள் அழைக்கப்படுகின்றன?
- அபௌர்ஷேயம் என வேதங்கள் ஏன் அழைக்கப்படுகின்றன?
- வேதங்கள் எத்தனை? அவை எவை?
- வேதங்களில் முதலாவது எது? இறுதியானது எது?
- இருக்கு என்பதன் பொருள்?
- இருக்கு வேதம் எதனை கூறுகிறது?
- யசுர் வேதம் எதனை கூறுகிறது?
- சாமம் என்பதன் பொருள் யாது?
- காலத்தால் முந்திய இசைநூல் எது?
- அதர்வண வேதம் எதனைக் கொண்டுள்ளது?

- வேதங்களின் 4 பகுதிகளும் எவை?
- வேதங்களின் 3 காண்டங்களும் எவை?
- வேதத்தின் இறுதிப்பகுதி எது? அதன் வேறு பெயர்கள் 2 தருக?

## செயலட்டை-09

**சைவநெறி – தரம்** 10 **அலகு -09**

- "தெய்வத்தன்மை பொருந்திய நூல்" எனும் பொருள் தருவது எது?

……………………………………………………………………………………………………

- திருமுறை என்பது யாது?

…………………………………………………………………………………………………..

- திருமுறை பாடிய அருளாளர்கள் தொகை யாது?

……………………………………………………………………………………………………

- திருமுறைகளைத் தொகுத்தவர் யார்? தொகுப்பித்தவர் யார்?

…………………………………………………………………………………………………..

- திருமுறையின் சிறப்புக்கள் 3 தருக?

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

- திருமுறைகளை அட்டவணைப்படுத்துக?

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

## செயலட்டை-10

**சைவநெறி – தரம்** 10 **அலகு -09 - 1**

- "அங்கமும் வேதமும்…………" எனும் பதிகம் பாடியவர் யார்? பாடப்பட்ட தலம் எது?

  …………………………………………………………………………………………………………

- திருமருகலில் சம்பந்தர் கண்ட காட்சி யாது?

  ………………………………………………………………………………………………………..

- "அங்கமும் வேதமும்…………" எனும் பதிகத்தின் பண் யாது?

  ……………………………………………………………………………………………………………

- "உற்றுமை சேர்வது…………" எனும் பதிகம் பாடப்பட்ட தலம் எது? பதிகத்தின் பண் யாது?

  …………………………………………………………………………………………………………..

- "உற்றுமை சேர்வது…………" எனும் பதிகத்தில் காணப்படும் மெய்,காமன்,பணி எனும் சொற்களின் இரு பொருள்களையும் தருக?

  - மெய் -………………………………………………………………………………..
  - காமன் - ………………………………………………………………………
  - பணி - …………………………………………………………………………………

- "அங்கமும் வேதமும்…………" ,"உற்றுமை சேர்வது…………" எனும் பதிகங்களை அடிமுறை தவறாது எழுதி பொழிப்புரையையும் எழுதுக?

  ………………………………………………………………………………………………………………

  ………………………………………………………………………………………………………………

  ………………………………………………………………………………………………………………

  ………………………………………………………………………………………………………………

  ………………………………………………………………………………………………………………

  ……………………………………………………………………………………………………………

## செயலட்டை-11

**சைவநெறி – தரம் 10** **அலகு -09 - 2**

- "குனித்த புருவமும்…………" எனும் பதிகம் பாடியவர் யார்? பாடப்பட்ட தலம் எது?

…………………………………………………………………………………………………………

- இப் பதிகத்தில் வர்ணிக்கப்படும் இறைவனது திருவடிவம் எது?

………………………………………………………………………………………………………..

- அப்பர் பெருமான் சிதம்பரத்தில் இறைவனின் எத் திருக்கோலத்தை தரிசித்து மகிழ்ந்தார்?

…………………………………………………………………………………………………………

- "நாமார்க்கும் குடியல்லோம்…………" எனும் பதிகம் பாடப்பட்ட சந்தர்ப்பம் எது?

………………………………………………………………………………………………………..

- சமணர்கள் அப்பர் மீது கோபமுற்றமைக்கான காரணம் யாது?

……………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………..

- "குனித்த புருவமும்…………" ," நாமார்க்கும் குடியல்லோம்…………" எனும் பதிகங்களை அடிமுறை தவறாது எழுதி பொழிப்புரையையும் எழுதுக?

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

## செயலட்டை-01

**சைவநெறி – தரம் 10** **அலகு -09**

- "அந்தணாளனுன்..." எனும் பதிகம் பாடியவர் யார்?
- "அந்தணாளனுன்..." எனும் பதிகம் பாடப்பட்ட சந்தர்ப்பம் யாது?
- "அந்தணாளனுன்..." எனும் பதிகம் பாடப்பட்ட தலம் எது?
- இப்பதிகத்தில் இடம்பெறும் புராணக்கதை எது?
- "அந்தணாளனுன்..." எனும் பதிகத்தின் பண் யாது?
- சுந்தரர் கண்பார்வை இழந்தமைக்கான காரணம் யாது?
- சுந்தரர் இடக்கண் பார்வை பெற்ற தலம் எது?
- சுந்தரர் வலக்கண் பார்வை பெற்ற தலம் எது?
- "மீளா அடிமை..." எனும் பதிகம் பாடப்பட்ட சந்தர்ப்பம் யாது?
- "மீளா அடிமை..." எனும் பதிகத்தின் பண் யாது?
- திருவாசகம் பாடியவர் யார்?
- திருவாசகம் எத்தனையாம் திருமுறையில் அடங்கும்?
- "பால் நினைந்து..." எனும் பதிகம் அருளப்பட்ட தலம் எது?
- பிடித்த பத்து என்பது யாது?
- "தந்ததுன் தன்னை..." எனும் பதிகம் அருளப்பட்ட தலம் எது?
- ஒன்பதாம் திருமுறையில் அடங்கும் நூல்கள் எவை?
- திருவிசைப்பா எத்தனை பேரால் பாடப்பட்டுள்ளது?
- "கற்றவர் விழுங்கும்..." எனும் பதிகம் பாடப்பட்ட தலம் எது?
- இப்பதிகத்தின் பண் யாது?
- திருப்பல்லாண்டு யாரால் பாடப்பட்டது?

## செயலட்டை-02

**சைவநெறி – தரம் 10** **அலகு – 10,11**

- பெரிய புராணம் யாரால் பாடப்பட்டது?
- பெரிய புராணம் யார் வரலாற்றைப் பாடுகிறது?
- பெரிய புராணம் எத்தனை விருத்தப்பாக்களைக் கொண்டது?
- பெரிய புராணம் எத்தனை காண்டங்களைக் கொண்டது?
- பெரிய புராணம் எத்தனை சருக்கங்களைக் கொண்டது?
- திருக்கூட்டச்சிறப்பில் கூறப்படும் சிவனடியார் சிறப்புக்கள் 2 தருக?
- திலகவதியார் பிறந்த இடம் எது?
- திலகவதியாரின் பெற்றோர் பெயர் யாது?
- திலகவதியார் உயிர் விடத் துணிந்தது ஏன்?
- திலகவதியாருக்காக நிச்சயிக்கப்பட்டவர் யார்?

## செயலட்டை-03

**சைவநெறி – தரம் 10** **அலகு – 12**

- “திருக்கோயில் இல்லாத …..” எனும் பதிகம் யாரால் பாடப்பட்டது?
- ஆலயங்களில் இடம்பெறும் ஆறுகாலப் பூசைகளும் எவை?
- ஆண்டுக்கொரு முறை கொடியேற்றி கிரியைகள் இடம்பெறும் பெருவிழா எது?

- மகோற்சவ கிரியைகள் எதனை உணர்த்துகிறது?
- இறைவனின் ஐந்தொழில்களையும் அவை சுட்டும் மகோற்சவ கிரியைகளினையும் தருக?
- கிராமசாந்தி என்பது யாது?
- வாஸ்துசாந்தி ஏன் இடம்பெறுகிறது?
- நவதானியம் முளையிடக் காரணம் யாது?
- இரட்சாபந்தனம் எதற்காக இடம்பெறுகிறது?
- கொடி மரம், கொடிச்சீலை , கயிறு என்பன எவற்றை சுட்டுகின்றது?

## செயலட்டை-04

**சைவநெறி – தரம் 10** **அலகு – 13**

- திருஞானசம்பந்தர் பிறந்த இடம் எது?
- திருஞானசம்பந்தரது பெற்றோரின் பெயர் யாது?
- சம்பந்தர் பாடிய முதற் பதிகம் எது?
- திருஞானசம்பந்தர் "ஆளுடைய பிள்ளையார்" எனப் பெயர் பெறக் காரணம் யாது?
- சம்பந்தர் 'திருஞானசம்பந்தர்' எனப் பெயர் பெறக் காரணம் யாது?
- சம்பந்தர் இறுதியாகப் பாடிய பதிகம் எது?
- சம்பந்தர் முத்தி அடைந்த தினம் எது?
- இவர் இவ்வுலகில் வாழ்ந்த காலம் எது?
- தனது திருமணத்தின் போது திருஞானசம்பந்தர் பாடிய பதிகம் எது?
- அனல் வாதத்தின் போது பயன்படுத்தப்பட்ட ஏடுகளில் எழுதப்பட்டிருந்த பதிகம் எது?
- புனல் வாதத்தின் போது பயன்படுத்தப்பட்ட ஏடுகளில் எழுதப்பட்டிருந்த பதிகம் எது?

- திருநாவுக்கரசர் பிறந்த இடம் எது?
- திருநாவுக்கரசரது பெற்றோரின் பெயர் யாது?
- நாவுக்கரசருக்கு சமணர்களால் இழைக்கப்பட்ட கொடுமைகள் 3 தருக?
- உழவாரப்படையாளி என நாவுக்கரசர் ஏன் அழைக்கப்படுகிறார்?
- நாவுக்கரசர் முதலில் பாடிய பதிகம் எது?
- நாவுக்கரசர் இறுதியாய் பாடிய பதிகம் எது?
- நாவுக்கரசர் இவ்வுலகில் வாழ்ந்த காலம் எது?
- நாவுக்கரசர் முத்தி அடைந்த தினம் எது?
- சம்பந்தரும் அப்பரும் இணைந்து செய்த அற்புதங்கள் 2 தருக?

## <u>செயலட்டை-05</u>

**சைவநெறி – தரம் 10** **அலகு – 14**

- சந்தானம் என்பதன் பொருள் என்ன?
- குரவர் என்பதன் பொருள் யாது?
- சந்தான குரவர் என்பது எதனைச் சுட்டி நிற்கிறது?
- சந்தான குரவரின் இரு வகையினரையும் குறிப்பிடுக?
- அகச் சந்தான குரவர் யாவர்?
- புறச் சந்தான குரவர் யாவர்?
- மெய்கண்ட தேவரது பெற்றோர் பெயர் யாது?
- மெய்கண்ட தேவர் பிறந்த இடம் எது?
- இவர் வாழ்ந்த காலம் எது?
- மெய்கண்ட தேவரது இயற்பெயர் யாது?
- மெய்கண்ட தேவரால் அருளப்பட்ட நூல் எது?

- சித்தாந்த சாத்திர நூல்களில் முதல் நூல் எது?
- மெய்கண்ட தேவரது சீடர்களில் இருவரினைத் தருக?
- 'உண்மை விளக்கம்' எனும் நூலை இயற்றியவர் யார்?
- மெய்கண்ட தேவரது குருபூசைத் தினம் எது?
- அருணந்தி சிவாச்சாரியார் பிறந்த இடம் எது?
- அருணந்தி சிவாச்சாரியார் வாழ்ந்த காலம் எது?
- அருணந்தி சிவாச்சாரியாரின் சிறப்புப் பெயர் யாது?
- அருணந்தி சிவாச்சாரியார் எழுதிய நூல் எது?
- சிவஞானபோதத்தின் வழி நூல் எது?
- சிவஞானசித்தியார் எத்தனை பகுதிகளைக் கொண்டது?
- சிவஞானசித்தியாரின் 2 பகுதிகளும் எவை?
- பரபக்கம் எதனைக் கூறுகிறது?
- சுபக்கம் எதனைக் கூறுகிறது?
- அருணந்தி சிவாச்சாரியாரின் குருபூசைத் தினம் எது?

## செயலட்டை-06

**சைவநெறி – தரம் 10** **அலகு – 15**

- யோகியர் என்படுபவர் யாவர்?
- பசுக்களின் துயர் நீக்க யோகியர் கைக்கொண்ட உத்தி யாது?
- யோகியர் திருமூலர் என அழைக்கப்படக் காரணம் யாது?
- திருமூலர் பாடிய நூல் எது?
- திருமந்திரம் எத்தனையாம் திருமுறையில் அடங்கும்?

- திருமந்திரம் எத்தனை பாடல்களைக் கொண்டது?
- திருமந்திரம் எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறது?
- திருமந்திரம் எத்தனை தந்திரங்களை உள்ளடக்கியது?
- தந்திரம் என்பது எதனைக் குறிக்கிறது?
- திருமந்திரம் கூறும் விடயங்கள் 3 தருக?

## செயலட்டை-07

**சைவநெறி – தரம் 10** **அலகு – 16**

- சுவாமி விபுலாநந்தர் பிறந்த இடம் எது?
- விபுலாநந்தரின் பெற்றோர் பெயர் யாது?
- விபுலாநந்தரின் இயற் பெயர் யாது?
- விபுலாநந்தர் தனது இளமைக்கால கல்வியைப் பெற்ற பாடசாலைகள் எவை?
- மயில்வாகனாரின் பிரமச்சரிய நாமம் எது?
- பிரபோதசைதன்யர் துறவறம் மேவிய தினம் எது?
- பிரபோதசைதன்யருக்கு விபுலாநந்தர் எனும் துறவு திருநாமத்தை வழங்கியவர் யார்?
- விபுலாநந்தர் தனது குரு பெயரினால் நிறுவிய பாடசாலை எது?
- விபுலாநந்தர் இராமகிருஸ்ண சங்கம் சார்பாக பாடசாலைகள் அமைத்த இடங்கள் 2 தருக?
- உலகில் தமிழுக்கான முதல் பேராசிரியர் யார்?
- பண்டைத்தமிழரின் இசை மரபு பற்றிய ஆராய்ச்சி நூலாக சுவாமிகளால் வெளியிடப்பட்ட நூல்?

- விபுலாநந்தரின் நாடகத்துறை சார்ந்தநூல் எது?
- மதங்கசூளாமணி வெளியிடப்பட்ட காலம் எது?
- மதங்கசூளாமணியினை வெளியிட்ட சங்கம் எது?
- இலங்கை பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை நிறுவப்பட்ட ஆண்டு எது?
- இலங்கை பல்கலைக்கழகத்தில் தமிழுக்கான முதலாவது பேராசிரியர் யார்?
- இலங்கை பல்கலைக்கழகத்தில் தமிழுக்கான முதலாவது பேராசிரியராக விபுலாநந்தர் செயற்பட்ட காலப்பகுதி எது?
- யாழ்நூல் எப்போது அரங்கேற்றம் செய்யப்பட்டது?
- யாழ்நூல் அரங்கேற்றம் செய்யப்பட்ட இடம் எது?
- சுவாமி விபுலாநந்தர் இவ்வுலகை நீத்த ஆண்டு எது?

## செயலட்டை-08

**சைவநெறி – தரம் 10** **அலகு – 17**

- அறிவே வடிவான பொருள் யாது?
- அறிவிக்காமலே அறியும் பொருள் யாது?
- அறிவித்தால் அறியும் பொருள் யாது?
- அறிவித்தாலும் அறியமாட்டாத பொருள் யாது?
- சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்களும் எவை?

- ஆன்மாக்களின் வேறு பெயர்கள் 2 தருக?
- பாசங்கள் எனப்படுபவை எவை?
- பாசம்  மலம் எனப் பெயர் பெறக் காரணம் யாது?
- பாசம் ஏன் அசித்து எனப்படுகிறது?
- சத்து என்பதன் கருத்து யாது?
- சத்துப்பொருட்கள் மூன்றும் எவை?
- சத்துப்பொருட்களின் இயல்புகள் 3 தருக?
- ஆன்மா சதசத்து எனப்படுகிறது?
- சைவசித்தாந்தம் கூறும் கடவுளின் இரண்டு நிலைகளும் எவை?
- சைவசித்தாந்தம் சொருபநிலையிலுள்ள கடவுளை எவ்வாறு கூறுகிறது?
- மூலமலம் எனப்படும் மலம் எது?
- கன்மத்தின் இரு வகைகளும் எவை?
- சைவநாற்பாதங்களும் எவை?
- ஆன்மாக்களின் மூன்று வகைகளும் எவை?
- ஆன்மாக்களின் உயர் குறிக்கோள் யாது?